ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1698/13 - 2011 මාර්තු 23 වැනි බදාදා - 2011.03.23

*1698/13 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டம்

*2011ஆம் ஆண்டின் வரவு செலவு பிரேரணைகளைப் பின்பற்றி 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் 61ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

டாக்டர் ராஜித சேனாரத்ன,
கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு
2011, நவெம்பர் 27.

**ஒழுங்குவிதி**

1. இவ்வொழுங்குவிதி 2011ஆம் ஆண்டின் கடற்றொழில், (கட்டணங்கள் இல்லாதொழித்தல்) ஒழுங்குவிதி என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 2011, சனவரி 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

2. அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் 2011, சனவரி 1ஆந் திகதியிலிருந்து இவ்வொழுங்குவிதிக்கான அட்டவணையின் நிரை III இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணம் எதுவும் அந்த நிரையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சேவையைப் புரிதல் தொடர்பில் விதிப்பனவு செய்யப்படுதலாகாது என்பதுடன் அதற்கிணங்க இந்த ஒழுங்குவிதிக்கான அட்டவணையின் நிரை 1 இல் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இந்த ஒழுங்குவிதியின் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட முறையில் திருத்தப்பட்டதாக கருதப்படுதலும் வேண்டும்.

**அட்டவணை**

| இல. | நிரை I | நிரை II | நிரை III | ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. | ஒழுங்குவிதியின் பெயரும் வர்த்தமானியின் திகதியும் | ஒழுங்குவிதிக்கான திருத்தம் | எந்தச் சேவைக்காக கட்டணம் அறவிடப்பட்டதோ அந்தச் சேவையும் கட்டணமும் | ரூ. ச. |
| | 1976 ஆம் ஆண்டின் மீன்பிடிப் படகுகள் (ஈடு) ஒழுங்குவிதி 1976, மாச்சு 03ஆந் திகதிய வர்த்தமானி இலக்கம் 230 | 1976 ஆம் ஆண்டின் மீன்பிடிப் படகுகள் (ஈடு) ஒழுங்குவிதி அவ்வொழுங்குவிதி களுக்கான இரண்டாம் அட்ட வணையை நீக்கஞ்செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. | (1) ஈட்டுச் சாதனம் ஒன்றைப் பதிவு செய்வதற்கு | 12. 50 |

| இல. | நிரை I | நிரை II | நிரை III | |
|---|---|---|---|---|
| 1. | ஒழுங்குவிதியின் பெயரும் வர்த்தமானியின் திகதியும் | ஒழுங்குவிதிக்கான திருத்தம் | எந்தச் சேவைக்காக கட்டணம் அறவிடப்பட்டதோ அந்தச் சேவையும் கட்டணமும் | ரூ. ச. |
| | 1978, ஏப்பிறல் 21ஆந் திகதிய 307ஆம் இலக்க வர்த்தமானியால் திருத்தப்பட்டது. | | (2) ஈடொன்று மீட்கப்பட்டதன்மீது ஈடுகளின் இடாப்பில் புறக்குறிப் பொன்றைச் செய்வதற்கு | 3. 00 |
| | | | (அ) ஈட்டின் மீட்பு பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்றமையின் விளை வாந்தன்மை | 3.00 |
| | | | (ஆ) ஈடு மீட்கப்பட்டமை பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்றமையின் மீதான விளைவாந்தன்மை | 3.50 |
| | | | (3) ஈடுகளின் இடாப்பிலுள்ள பதிவொன் றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி யொன்றை வழங்குவதற்கு | 3.50 |
| | | | (4) பதிவுச்சான்றிதழின் புறக்குறிப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை வழங்குவதற்கு | 3.50 |
| | | | (5) படகுகளின் இடாப்பில் புறக்குறிப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை வழங்குவதற்கு | 3.50 |
| | | | (6) மீட்பு பற்றிய அறிவித்தலொன்றின் அத் தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அல்லது அத்தகைய அறிவித்தலின் இணைப்பிரதியொன்றை வழங்குவதற்கு | 3.50 |
| | | | (7) ஈடுகளின் இடாப்பின் தேடுகையொன்றுக்கு | |
| | | | (அ) ஒரு மாதத்தை விஞ்சாத அல்லது அதனிலும் குறைந்த காலப் பகுதிக்கு | 2. 00 |
| | | | (ஆ) ஒரு மாதத்தை விஞ்சியவொரு காலப் பகுதிக்கு, ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் பாகத்திற்கும் | 0. 50 |
| | | | (இ) எந்தப் புறக்குறிப்பின் அல்லது பதி வின் இயைபான எல்லா விவரங்க ளும் கொடுத்துதவப்பட்டுள்ளனவோ அந்தப் புறக்குறிப்பின் அல்லது பதி வின் குறித்துரைக்கப்பட்ட புறக்குறிப் புக்கு அல்லது பதிவுக்கு | 2. 00 |
| 2. | 1980 ஆம் ஆண்டின் மீன்பிடிப் படகுகள் பதிவுசெய்தல் ஒழுங்கு விதிகள் - 1980, ஒற்றோபர் 3ஆந் திகதிய கசெற் இல. 109 | 1980 ஆம் ஆண்டின் மீன்பிடிப் படகுகள் பதிவு செய்தல் ஒழுங்குவிதிகள் இத்தால் திருத்தப்படுகின்றன: | (1) மீன்பிடிப் படகொன்றை முதற் தடவை யாக பதிவுசெய்வதற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் - | |

| இல. | நிரை I | நிரை II | நிரை III | |
|---|---|---|---|---|
| | ஒழுங்குவிதியின் பெயரும் கசெற்றின் திகதியும் | ஒழுங்குவிதிக்கான திருத்தம் | எந்தச் சேவைக்கான கட்டணம் அறவிடப்பட்டதோ அந்தச் சேவையும் கட்டணமும் | ரூ. ச. |
| | 2006 சனவரி 30ஆம் திகதிய 1430/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியால் திருத்தப்பட்டது. | (1) ஒழுங்குவிதி 4இன் (1)ஆம் பந்தியில் "இதற்கான இரண்டாம் அட்டவணையிலுள்ள நிரல் (அ) என்பதில் தரப்பட்டுள்ள இயை பான கொடுப்பனவின் மீதும்" என்னும் சொற்களை நீக்கம் செய்வதன் மூலம். | நிரல் அ<br>1. நீளத்தில் 32' க்கு மேற்பட்ட மீன்பிடிப் படகுகளுக்கு. | 500.00 |
| | | | 2. உள்ளிணை இயந்திரம் இணைத்த நீளத்தில் 32' வரையான மீன்பிடிப் படகுகளுக்கு | |
| | | | 3. வெளியிணை இயந்திரம் இணைக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளுக்கு | 100.00 |
| | | | 4. பாரம்பரிய மீன்பிடிப் படகுகளுக்கு | 15.00 |
| | | (2) ஒழுங்குவிதி 8 இல் 'இதற்கான இரண்டாம் அட்டவணையில் நிரல் 'ஆ' என்பதில் குறித்துரைக்கப் பட்டவாறு இயைபான கட்டணத் துடன் சேர்த்து' என்னும் சொற் களை நீக்கிவிடுவதன் மூலம். | (2) மீன்பிடிப்படகின் பதிவைப் புதுப் பிப்பதற்கான கட்டணம் | 500.00 |
| | | (3) ஒழுங்குவிதி 10இன் (1)ஆம் பந்தியில் ' இரண்டாம் அட்டவ ணையின் நிரல் (இ) என்பதில் தரப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்திய பின்னர்' என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலம். | நிரல் ஆ<br>1. நீளத்தில் 32' க்கு மேற்பட்ட இயந்திர மீன்பிடிப் படகுகளுக்கு. | 250.00 |
| | | | 2. உள்ளிணைந்த இயந்திரம் இணைந்த 32' வரையான மீன்பிடிப்படகுகளுக்கு | 150.00 |
| | | | 3. வெளியிணை இயந்திரம் இணைக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளுக்கு | 50.00 |
| | | | 4. பாரம்பரிய மீன்பிடிப் படகுகளுக்கு | 10.00 |
| | | | (3) மீன்பிடிப்படகின் கைமாற்றத்திற்கான கட்டணம்<br>நிரல் அ | |
| | | (4) ஒழுங்குவிதி II இல் "அத்தகைய நோக்கத்திற்கு அத்தகைய படகு தொடர்பில் ரூபா 25/- பணத்தொகை யொன்று செலுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற் களை நீக்கி விடுவதன்மூலம் | 1. நீளத்தில் 32'க்கு மேற்பட்ட மீன்பிடிப் படகுகளுக்கு | 250.00 |
| | | | 2. உள்ளிணை இயந்திரம் இணைத்த நீளத்தில் 32' வரையான மீன்பிடிப் படகுகளுக்கு | 150.00 |
| | | | 3. வெளியிணை இயந்திரம் இணைக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளுக்கு | 50. 00 |
| | | | 4. பாரம்பரிய மீன்பிடிப் படகுகளுக்கு | 10 .00 |
| | | (5) ஒழுங்குவிதி 13 இன் (I) ஆம் பந்தியில் "ரூபா பதினைந்து பணத்தொகையொன்றுக்கான அனுப்புத் தொகையொன்றுடன் சேர்த்து" என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலம் | (4) இயந்திரமொன்றைப் பெற்றுக்கொண்டதன் மீது மீள்பதிவுக்கு | 25.00 |
| | | | (5) பதிவுச் சான்றிதழின் இணைப் பிரதியொன்றை வழங்குவதற்கு | 15.00 |
| | | (6) இரண்டாம் அட்டவணையில் நிரல் அ நிரல் ஆ அத்துடன் நிரல் இ என்பவற்றை நீக்கிவிடுவதன் மூலம். | | |

| இல. | நிரை I<br>ஒழுங்குவிதியின் பெயரும் கசெற்றின் திகதியும் | நிரை II<br>ஒழுங்குவிதிக்கான திருத்தம் | நிரை III<br>எந்தச் சேவைக்கான கட்டணம் அறவிடப்பட்டதோ அந்தச் சேவையும் கட்டணமும் | ரூ. ச. |
|---|---|---|---|---|
| 3. | 1996 ஆம் ஆண்டின் கடற்றொழில் தொழிற்பாடுகள் ஒழுங்குவிதிகள் 1996 நவம்பர் 7 ஆம் திகதிய 948/25ஆம் இலக்க ஒழுங்குவிதிகள். | 1996 ஆம் ஆண்டின் கடற்றொழில் தொழிற்பாடுகள் ஒழுங்குவிதி இத்தால் திருத்தப்படுகின்றது. | மீன்பிடித் தொழிற்பாடுகள்<br>பாகம் III | |
| | | (1) ஒழுங்குவிதி 4 இல் "இதற்கான அட்டவணையில் பாகம் III இல் குறித்துரைக்கப்பட்ட இயைபான உரிமக் கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை நீக்கி விடுவதன் மூலம். | 1. (அ) நீளத்தில் 32" க்கு மேற்பட்ட உள்ளிணை இயந்திரத்துடன் ஒருவகை மீன்பிடி உபகரணங்கள் மூலம் படகுகளினால் மேற்கொள்ளப்படும் சகல வகையான மீன்பிடித்தொழிற்பாடுகளுக்கும் | 500.00 |
| | | | (ஆ) ஒவ்வொரு மேலதிக வகையினதான மீன்பிடி உபகரணங்களுக்கும் | 100.00 |
| | | (2) அட்டவணையில் அதன் பாகம் III ஐ நீக்கிவிடுவதன் மூலம். | 2. (அ) நீளத்தில் 32' வரை உள்ளிணை இயந்திரத்துடன் ஒருவகை மீன்பிடி உபகரணங்கள் மூலம் மீன்பிடிப்படகுகளினால் மேற்கொள்ளப்படும் சகல வகையான மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் | 400.00 |
| | | | (ஆ) ஒவ்வொரு மேலதிக வகையினதான மீன்பிடி உபகரணங்களுக்கும் | 100.00 |
| | | | 3. (அ) வெளியிணை இயந்திரத்துடன் ஒரு வகையினதான மீன்பிடி உபகரணங்கள் மூலம் படகுகள்/பாரம்பரிய கலங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் சகல வகையான மீன்பிடிப் படகுகளுக்கும் | 400.00 |
| | | | (ஆ) ஒவ்வொரு மேலதிக வகையினதான மீன்பிடி உபகரணங்களுக்கும் | 100.00 |
| | | | 4. கரைவலை (மாதல்) கலம் மற்றும் வலைமூலம் மேற்கொள்ளப்படும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு. | 300.00 |

| இல. | நிரை I<br>ஒழுங்குவிதியின் பெயரும் வர்த்தமானியின் திகதியும் | நிரை II<br>ஒழுங்குவிதிக்கான திருத்தம் | நிரை III<br>எந்தச் சேவைக்கான கட்டணம் அறவிடப்பட்டதோ அந்தச் சேவையும் கட்டணமும் | ரூ. ச. |
|---|---|---|---|---|
| | | | 5. (அ) உள்ளிணை இயந்திரங்களுடன் ஒரு வகையினதான மீன்பிடி உபகரணத்தைப் பயன்படுத்தி படகுகளுடன் பாரம்பரிய கலங்களுடன் மேற்கொள்ளப் படும்எல்லா வகையான மீன்பிடி நடவடிக்கைகளுக்கும். | 200.00 |
| | | | (ஆ) மேலதிக வகையினதான மீன்பிடி உபகரணம் ஒவ்வொன் றுக்கும் | 50.00 |
| | | | 6. ஜாகொட்டு மற்றும் அத்தோலி மற்றும் ஏனைய பொறிகள் மூலம் மேற்கொள் ளப்படும் மீன்பிடி நடவடிக்கை களுக்கு. | 100.00 |
| | | | 7. கலன்களைப் பயன்படுத்தாது மேற் கொள்ளப்படும் சகல மீன்பிடி நடவடிக்கைகளுக்கும். | 25.00 |
| 4. | 1996 ஆம் ஆண்டின் உள்நாட்டுக் கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கு வழி, 1996 நவெம்பர் 7ஆம் திகதிய 948/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி. | 1996 ஆம் ஆண்டின் உள்நாட்டுக் கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கு விதி இத்தால் திருத்தப்படுகின்றது. | 1. உரிமக் கட்டணம் | |
| | | | (1) செவுள் வலைத் தொகுதியின் விடயத்தில் | 50.00 |
| | | | (2) ஏனைய மீன்பிடி உபகரணங்களின் விடயத்தில் | 25.00 |
| | | (1) ஒழுங்குவிதி 5 இல் "உரிம மளிக்கும்கட்டணத்துடன் சேர்த்து" என்பதிலிருந்து அவ்வொழுங்கு விதியின் இறுதி வரையிலான எல்லா சொற்களையும் நீக்கி விடுவதன்மூலமும்; அத்துடன் | 2. புதுப்பித்தல் கட்டணம் | |
| | | | (1) செவுள் வலைத் தொகுதியின் விடயத்தில் | 50.00 |
| | | | (2) ஏனைய மீன்பிடி உபகரணங்களின் விடயத்தில் | 25.00 |
| | | (2) ஒழுங்குவிதி 8இல் "புதுப்பித்தல் கட்டணத்தின் கொடுப்பனவின் மீது" என்பதிலிருந்து அவ் வொழுங்கு விதியின் இறுதி வரையிலான எல்லா சொற் களையும் நீக்கிவிடுவதன் மூலம். | | |
| 5. | 1998 ஆம் ஆண்டின் உயிர்மீன் இறக்குமதி ஒழுங்குவிதிகள், 1998 யூலை 16ஆம்திகதிய 1036/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 1998 ஆம் ஆண்டின் உயிர்மீன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்கு விதிகள் இத்தால் திருத்தப்படுகின் றன. | 1. ஏதேனும் இனத்தைச் சேர்ந்த உயிர் மீன் ஏற்றுமதி செய்தல். | 1,000.00 |
| | | | 2. உயிருள்ள ஏதேனும் மீன், மீனின் முட்டையை, மீன்முட்டைத் தொகு தியை அல்லது மீன் சினையை இறக்கு மதி அல்லது ஏற்றுமதி செய்வதற்கு | 1,000.00 |

| *இல.* | *நிரை I* | *நிரை II* | *நிரை III* | |
|---|---|---|---|---|
| | *ஒழுங்குவிதியின் பெயரும் வர்த்தமானியின் திகதியும்* | *ஒழுங்குவிதிக்கான திருத்தம்* | *எந்தச் சேவைக்கான கட்டணம் அறவிடப்பட்டதோ அந்தச் சேவையும் கட்டணமும்* | *ரூ. ச.* |
| | | (1) ஒழுங்குவிதி 5 இல் "ரூபா ஆயிரத்துடன்" என்னும் சொற்களை நீக்கி விடுவதன் மூலமும், அத்துடன் | | |
| | | (2) ஒழுங்குவிதி II இல் "ரூபா ஆயிரத்துடன்" என்னும் சொற்களை நீக்கி விடுவதன் மூலம். | | |
| 6. | 2000 ஆம் ஆண்டின் சிங்கியிறால் கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள், 2000, மார்ச் 13ஆம் திகதிய 1123/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி. | 2000 ஆம் ஆண்டின் சிங்கியிறால் கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கு விதிகள், இத்தால் திருத்தப்படுகின்றது. | | |
| | | (1) ஒழுங்குவிதி 7 இன் (1)ஆம் பந்தியில் "முந்நூறு ரூபா கட்டணம் அதனுடன் இணைக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும், அத்துடன் | (1) முதுகுத்துடுப்புடன் இணைந்த முதுகெலும்பில்லாத சிங்கியிறாலின் அல்லது வழுவழுப்பான சிங்கியிறாலின் மாமிசத்தை உடைமையில் வைத்திருப்பதற்கு, வெளிக்காட்டி வைப்பதற்கு, விற்பனைக்காக உடைமை கொள்வதற்கு, வெளிக்காட்டி வைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது ஏற்றிச் செல்வதற்கு | 300.00 |
| | | | (2) முதுகுத்துடுப்புடன் இணைந்த முதுகெலும்பில்லாத சிங்கியிறாலை, அதன் மாமிசத்தை, அல்லது வாலை அத்துடன் வழுவழுப்பான சிங்கியிறாலை, அதன் மாமிசத்தை அல்லது வாலை ஏற்றுமதி செய்வதற்கு | 1000.00 |
| | | (2) ஒழுங்குவிதி 9இன் (1)ஆம் பந்தியில் "ரூபா 1000 கட்டணம் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதனுடன் இணைக்கப்படுதலும் வேண்டும். என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும். | | |
| 7. | 2003 ஆம் ஆண்டின் சங்கு குளித்தல் முகாமைத்துவ ஒழுங்குவிதி 2003 யூலை 21ஆம் திகதிய 1298/1 ஆம் இலக்க அதிவிசேட வாத்தமானி. | 2003 ஆம் ஆண்டின் சங்கு குளித்தல் முகாமைத்துவ ஒழுங்குவிதி இத்தால் திருத்தப்படுகின்றது. | | |
| | | (1) ஒழுங்குவிதி 7இன் (1)ஆம் பந்தியில் "அத்துடன் ஐந்நூறு ரூபா (500.00) கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை நீக்கி விடுவதன் மூலமும், அத்துடன் | (1) முத்துச் சிப்பியை உடைமையில் வைத்திருத்தல், விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தல், விற்பனை செய்தல், அல்லது ஏற்றிச் செல்லுதல். | 500.00 |
| | | | (2) முத்துச் சிப்பியின் ஏற்றுமதிக்கு | 1000.00 |
| | | (2) ஒழுங்குவிதி 9இன் (1)ஆம் ஆயிரம் ரூபா (1000) கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். என்னும் சொற்களை நீக்கி விடுவதன் மூலம், | | |



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.